# இலண்டன் தமிழ் நிலையம் - திருக்குறள் போட்டி 2021

இ பிரிவு

| இ பிரிவு | ஆண்டு 2, ஆண்டு 3 | Year 2 / Year 3 |
|---|---|---|

## கேள்விகள்

1. **திருக்குறளை எழுதியவர் யார்?**

   திருவள்ளுவர்

2. **திருக்குறளின் இன்னொரு பெயர் என்ன?**
   தெய்வ நூல்

3. **திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உண்டு?**
   நூற்றி முப்பத்து மூன்று அதிகாரங்கள் (133 அதிகாரங்கள்)

### அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

### என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 72)

அன்பு இல்லாதவர் எல்லாவற்றாலும் தமக்கே உரிமை உடையவராய் இருப்பர். அன்புள்ளவரோ பொருளால் மட்டும் அன்று; உடம்பாலும் பிறர்க்கு உரியவராய் இருப்பர். Those who are destitute of love appropriate all they have to themselves; but those who possess love consider even their bones to belong to others.

### செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்

### வானகமும் ஆற்றல் அரிது (குறள் 101)

ஒருவருக்கு ஒரு நன்மையும் நாம் செய்யாத போதும், அவர் நமக்கு உதவினால், அதற்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகயும் கொடுத்தாலும் சமம் ஆகாது. (The gift of) heaven and earth is not an equivalent for a benefit which is conferred where none had been received.

### சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா

### செய்யாமை மாசுஅற்றார் கோள் (குறள் 311)

மிகுந்த செழிப்பைத் தருகின்ற செல்வத்தைப் பெறக் கூடுமென்றாலும் அதன் பொருட்டுப் பிறருக்குப் கேடு செய்யாமலிருப்பதே மாசற்றவர்களின் கொள்கையாகும். It is the determination of the spotless not to cause sorrow to others, although they could (by so causing) obtain the wealth which confers greatness.